RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2323

# எட்டுத்தொகை காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்

வெ. முத்துலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்-624001, தமிழ்நாடு, இந்தியா.

# life values represented by the Eight Anthologies

**V. Muthulakshmi [a, *]**

[a] Department of Tamil, Athoor Cooperative Arts and Science College, Dindigul-624001, Tamil Nadu, India
*Corresponding author Email: profmuthulakshmiv@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2323
Received: 03-02-2023; Revised: 27-04-2023; Accepted: 05-05-2023; Published: 14-05-2023

**Abstract:** Love is an expression of the inner feelings of the people who have been living continuously since the Sangam period and the purpose of philosophy is to express men's bravery and to live and prosper through them. The people of the Sangam period were divided into two groups as internal and external. The ancient Tamil suppressed the love life internally and divided the inner life into two types: theft and chastity. Tholkkappiyar and iraiyanar have explained the theft and chastity through poems. The excellence of Mens love the theft and womens love the chastity are explained thoroug it. The internal messages of folk songs are similar as the sangam poems. which are oral songs that have been performed in Tamil Nadu since time immemorial. Oral songs appeared long before writing. So it can be said that oral songs are the source of internal messages found in literature.

**Keywords:** Sangam Poems, Sangam Food Culture, Eight Anthologies, Internal messages

## முன்னுரை

'பண்பாடு" என்பதன் பொருள் பண்படுத்துவது, சீர்படுத்துவது திருத்தமாய் இருப்பது என்று கூறலாம். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்பது மனிதர்களின் ஐம்புலன்களை பண்படுத்தி நல்வாழ்க்கை முயற்சிக்கு உறுதுணையாக வழிகோல்கிறது என்று சங்க இலக்கியங்களான கலித்தொகை எடுத்துரைக்கின்றது. உலகப் பொதுமறையாகவும், பண்பாட்டின் பெட்டகமாகவும் திகழ்கின்ற திருக்குறள் பண்புடைமை என்ற அதிகாரம் முழுமையும் பண்பாட்டின் விளக்கமாகவே உள்ளன. படிக்காத பாமரர்கள் கூட பண்பாடு படைத்தவர்களாக விளங்குகின்றனர். மனப்பக்குவம் பல நிலைகளில் பண்பாடாக வெளிப்படுகின்றது. இவ்வடிப்படையில் சங்க இலக்கிய பண்பாட்டின் அடிப்படையில் உள்ள கூறுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியங்களில் காதல்

வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் கண்ணாடி போன்று காட்டுபவை இலக்கியங்கள். அகம், புறம் என்ற சமுதாயத்தின் இரு துறைகளிலும் அடங்கிய சங்கத் தமிழ் மக்கள் நாட்டுப்புறப் பாடல்களையும் பாடி மகிழ்ந்த செய்தியை அறிய முடிகின்றது. தம் வாழிடத்தை ஐவகை நிலமாகப் பிரித்து முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகுத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

குறிஞ்சி மக்கள் ஆடிப்பாடி ஆண்டவனை வழிபட்டனர். தாம் வழிபடும் தெய்வத்தை வாய்மொழி இலக்கியம் வாயிலாக நன்கு உணர்த்திப் பாடுகின்றனர். இதைப் போன்றே நாட்டுப்புறப் பாடல்களில் காதலுக்கென்று தனி இடம் உண்டு. காதலும் வீரமும் ஒரு காலகட்டத்தில் தமிழர்களின் உயிர்கொள்கையாக இருந்து வந்தன. கொள்கைகள் மாறும்போது, இலக்கியங்களும் மாறுவது

இயற்கையாகும். நாட்டுப்புறப் பாடல்கள் எங்ஙனம் காதலுக்கு முதலிடத்தை வழங்கினவோ அதேபோல் தான் சங்க இலக்கியங்களிலும் காதலுக்கு முதலிடத்தை வழங்கியுள்ளன. நம்மிடம் புற இலக்கியங்களை விட அக இலக்கியங்களே மிகுதியாக உள்ளன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்றவைகளெல்லாம் அகநூல்களாகும். அன்பினால் மலர்ந்த காதல் வாழ்வைச் சுட்டுகின்றது. முருகப் பெருமான் முன் ஒரு பக்திப் பாடலைத் தொண்டர்கள் பாடியிருக்க வேண்டும் என்றும் "இதேபோல் குறுந்தொகையில் குறத்திப் பாடியதாகவும் நற்றிணை, ஐங்குறுநூறு போன்றவற்றில் வேலன் (பூசாரி) பாடியதாகவும் கலித்தொகையில் துணங்கைக் கூத்து ஆடும் போது பாடியதாகவும் ஊஞ்சல் ஆடும்போது பாடியதாகவும் மற்றும் புறநானூற்றில் அரசர் முன்னர் பாணன், பாடினி ஆகியோர் சென்று பாடிப் பரிசில் பெற்றனர்" என்று சு.சக்திவேல் கூறுகின்றார் (Sakthivel, 2009).

## வணிகத்தொடர்பு

சங்க காலத்தில் வாணிகம் நடைபெறாமைக்கு வணிகமுறை மிகுதியாக வழக்கத்துக்கு வாராமையும் ஒரு காரணம் எனலாம். வணிகம் பண்டமாற்று முறையிலேயே மிகுதியாக நடைபெற்றது. அதனால் பரிசிலர்க்குக் களிறும் மாவும் தேரும் தானமாக வழங்கினர் என்பதை,

"கானுறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடி வந்த தசும்பும் நிறைய
ஏரில் வாழ்நர் போரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்" (Visvanathan, 2014a)

எனும் பாடலடிகளில் வேட்டுவன் மான் தசையைக் கொடுத்தும் ஆய்ச்சியர் பாலும் தயிரும் கொடுத்தும் கடகமும் மிடாவும் நிறைய வெண்ணெல்லை மருத நிலத்து மக்களிடம் பெற்று மகிழ்ந்து சென்ற செய்தியைப் கூறுகிறது. இதை,

"முளையெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அறிகாற்பெரும் பயிறு நிலைக்கும்" (Puliyur Kesikan, 2009)

"வளைவல் பாண்மகள் வாலெயிற்று மடமகள்
வரா அல்சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்" (Puliyur Kesikan, 2009)

எனும் பாடலடிகளில் பாண்மகள் கெடிற்று மீனைக் கொடுத்துப் பயறும் வரால் மீனைக் கொடுத்துப் பழைய வெண்ணெல்லும் களகப்பெட்டி நிரம்பப் பெற்றுச் சென்ற பண்டமாற்று வணிகம் பற்றிய செய்தியைக் கூறுகிறது. உப்பு வணிகனின் அன்பு மகள் அழகிய வளையல்கள் ஒலிக்குமாறு கைகளை வீசி, 'வெள்ளிய கல்லுப்பும் நெல்லும் சரிக்குச் சரி' என்று கூறி உப்பைக் கொடுத்து நெல்லைப் பண்டமாற்றாகப் பெற்றுச் சென்றதனை (அகம்.140) கூறுகிறது (Visvanathan, 2014b). இவ்வாறு தமிழகத்தில் சங்ககாலத்தில் வாணிகம் பண்டமாற்று முறையிலேயே மிகுதியும் நடைபெற்றது. காசு கொடுத்துப் பொருள்களை வாங்கும் வழக்கம் இல்லை. குண்டுகட் பாலியாதனார் என்ற புலவருக்குச் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றப் புரவலன் யானைகள், குதிரைகள், ஆநிரைகள், நெற்குவை ஆகியவற்றுடன் அடிமைகளையும் தானமாக வழங்கினான் என்ற செய்தி தானம் பெற்ற அப்புலவரால் கூறப்பெற்றுள்ளது. இதை,

"குன்றுஉறழ்ந்த களிறென்கோ
கொய்யுளைய மாவென் கோ

மன்றுநிரை நிரையயன் கோ

மனக்களம ரொடு களமென் கோ

ஆங்கவை கனவென மருளவல்லே நனவின்

நல்கியோனே நசைசால் தோன்றல்" (Visvanathan, 2014a)

எனும் பாடலடிகளில் யானை, குதிரை, ஆநிரை ஆகியவற்றுடன் அடிமைகளையும் தானமாகப் பெற்றுப் புலவர் மகிழ்ந்து கூறினார். ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்னும் வள்ளல் தன்னைப் பாடி வந்த பரிசிலர்க்கு யானை, குதிரை, தேர், அணிகலன் ஆகியவற்றுடன் எருதுகளையும் தேரைச் செலுத்தும் பாகனையும் பரிசிலாகக் கொடுத்தான் என்ற செய்தியைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. தேர்ப்பாகனையும் பரிசிலாகப் பெற்ற இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் கூறுகிறார். இவ்வாறு ஆண்டைகள் புலவர்களுக்கு அடிமைகளைப் பரிசிலாக வழங்கிய செய்தியைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அடிமை வாணிகம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றில் காணப்படவில்லை.

## உலகப்பொதுமை

உலக நிலப்பரப்பின் ஒரு பகுதியில் வாழும் இனத்தின் மொழியில் எழுந்த இலக்கியம் சங்க இலக்கியம் என்றாலும் இதன் நோக்கம் உலகம் தழுவியது, உலகப்பொதுமை பேசுவது; நூல்களின் முதலில் 'உலகம்' என்ற சொல்லையும் அதன் பரியாய மொழிகளையும் மங்கலமொழியாகக் கொண்டு தொடங்குவது தமிழ்நூல் மரபு என்று உ.வே.சா கூறுகிறார். அத்தகு மரபில் தத்தம் கவிதைகள் தோற்றம் கொள்ளும் பாங்கைச் சங்க இலக்கியமே முன்னின்று தொடங்கி வைக்கிறது.

'உலகம் உவப்ப' என்று திருமுருகாற்றுப்படையும் 'நனந்தலை உலகம்' என்று முல்லைப்பாட்டும், 'வையகம் பனிப்ப' என்று நெடுநல்வாடையும் தொடங்குவதைக் காணலாம். பின்னர் இந்த மரபைத் திருவள்ளுவரும், கம்பரும், சேக்கிழாரும் இன்னபிற புலவர்களும் எடுத்தாளுவதைத் தமிழ் இலக்கியப் பரப்பில் காணமுடிகிறது. நிலப்பரப்பில் இருந்துகொண்டு வானையும் கடலையும் விண்மீன்களையும் விண்ணில் சுழலும் கோள்களையும் கண்டு பாடிய பாடல்களிலும் வானியல், சூழலியலைக் கண்டுகொள்ள முடிகிறது. ஞாயிறு இயங்கும் வழியும் அதன் இயக்கமும் அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டமும், காற்று இயங்கும் திசைகளும் ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கும் ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டு போய் அளந்தறிந்தவர்களைப் போல் நாளும் இத்துணை அளவுடையன என்று சொல்லும் கல்வியுடையோரும் உள்ளனர் என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடுவது இதற்குச் சான்றாகும் இதை,

"செஞ்ஞா யிற்றுச் செலவும்,

அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,

பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,

வளி திரிதரு திசையும்,

வறிது நிலைஇய காயமும், என்று இவை

சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்

இணைத்து என்போரும் உளரே" (Visvanathan, 2014a)

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்

தேன்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்

வயலகம் நிறையப் புதல் பூ மலர" (Visvanathan, 2014a)

எனும் பாடலடிகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. சனிக்கோளின் இயக்கத்தையும் வால்மீனின் இருப்பையும் கண்ணில் தெரியும் கோள்களைக் கவனித்தறிவது போலவே கட்புலனாகாத காலத்தையும்

வகைப்படுத்திக் கணிப்பதில் வல்லவர்கள் பழந்தமிழ்ப் புலவர்கள் என்பதற்கு அவர்கள் பெயர்களே சான்றுகளாகின்றன. கணியன் பூங்குன்றனார், கணிமேதாவியார் போன்றோர் குறிப்பிடதத்தக்கவர்களாவர்.

## இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்

வாழ்வில் என்றும் நிலைபெறும் வாழ்வியல் விழுமியங்களை அன்றே பாடிய பெருமை சங்கப் புலவர்களுக்குண்டு. தமிழில் அற இலக்கியங்கள் உயிர்த்தன என்றும் கொள்ளலாம். அதுபோல் கலித்தொகை மற்றும் அகநானூறு போன்ற அகநூல்களும் பதிற்றுப்பத்து போன்ற புறநூல்களும் பிற்காலத்தில் சிறு மற்றும் பெருங்காப்பியங்கள் தோன்றுவதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தன என்றும் கூறலாம் (Visvanathan, 2014d; Murugesan, 2016).

சங்க இலக்கியத்தின் மற்றொரு பண்பு இத்தொகை நூல்களில் பிற்காலத்தைப் போல் மறுஉலகைப் பற்றிய பேச்சுரைகள் மிகைபடக் காணவில்லை. ஓரிரண்டு குறிப்புகள் இருந்தாலும் மனித வாழ்க்கையின் புனிதமே சங்க இலக்கியத்தின் கருப்பொருள்களாகும். இதனை,

"யாதும் ஊரெ யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

..............................

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (Visvanathan, 2014a)

"வினையே ஆடவர்க்கு உயிரே வானுதல்

மனையுரை மகளிர்க்கு அவ்வாடவர் உயிர்" (Visvanathan, 2014c)

எனத் தூய காதல், தூய வீரம், ஒழுக்கம் என்பவற்றைப் புகழ்ந்துரைப்பதைச் சங்க இலக்கியம் தன் நோக்காகக் கொண்டுள்ளது. சங்கப்பாவணர்கள் மறந்தும் கூட தீய பண்புகளை எடுத்துக்காட்ட விரும்பவில்லை. எனவேதான் சங்க இலக்கியம் வாழ்வியல் களஞ்சியம், வரலாற்றுப் பெட்டகம், இயற்கைக் காப்பகம், பண்பாட்டு நிதியம் என்று கொள்வது உண்மை என்பதைப் பயில்வோர் உணர்கின்றனர்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் தனிச்சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. உலகின் ஏனைய இலக்கியங்களைவிட காதல், வீரம் பற்றிய செய்திகளை எடுத்துக்கூறுகின்றன. சங்கப்புலவர்கள் காதல், வீரம், கொடை முதலியவற்றைப் பொருளாக கொண்டு பாடப்பட்டுள்ளன. அறம், பொருள், இன்பத்தை வலியுறுத்துவதோடு வீடுபேற்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் புலவர்கள் பாடியுள்ளனர். சங்க இலக்கியம் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும், வாழ்வியல் களஞ்சியத்தை எடுத்துரைப்பதோடு உண்மைத்தன்மை கருத்துக்களை வழியுறுத்துகின்றன. இன்றைய காலக்கட்டம் வரை சங்க இலக்கியங்களின் வழி மக்கள் வாழ்வினை கடைபிடிக்கின்றனர்.

## References

Murugesan, K. (2016) Pathupattu Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India

Puliyur Kesikan, (2009) Ainkurunooru, Gowra Publications, Chennai, India

Sakthivel, S. (2009) Nattupuraviyal Aivu, Manivasagar Pathippagam, Chennai, India

Visvanathan, A. (2014a) Purananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Visvanathan, A. (2014b) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Visvanathan, A. (2014c) Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Visvanathan, A. (2014d) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

**Funding**

This study was not funded by any grant

**Conflict of interest**

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

V. Muthulakshmi, life values represented by the Eight Anthologies, Indian Journal of Tamil, 4(2) (2023) 15-19. https://doi.org/10.54392/ijot2323